Reg. No. : .....................................

Name : .......................................

**Second Year – March 2018**

**Code No. 9040**

Time : 2 ½ Hours
Cool-off time : 15 Minutes

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except non-programmable calculators are not allowed in the Examination Hall.

**1, 2** வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக மதிப்பெண் ஒன்று வீதம் **(2 × 1 = 2)**

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" கோடிட்ட சொல் உணர்த்தும் பொருள்.

   (அ) பெற்றோர் (ஆ) உறவினர்

   (இ) உடன்பிறந்தோர் (ஈ) நண்பர்கள்

2. செயற்கை இழை பஞ்சுத்துணி நெசவு எது ?

   (அ) பாலியஸ்டர் (ஆ) பருத்தி இழை

   (இ) சணல் (ஈ) மூங்கில்

**3 முதல் 8 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதவும். 3 மதிப்பெண் வீதம்** **(6 × 3 = 18)**

3. எழில்மலை – எலிமலையானது எவ்வாறு என்பதைச் சுட்டுக.

4. ‘கரிப்பு மணிகள்’ – நூல் குறித்து சிறு குறிப்பு வரைக

5. கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்து வரைக.

6. பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைத் தடுக்கும் வழிமுறைகளைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் பெட்டிச் செய்தி தயார் செய்க.

7. நவீன தொழில் நுட்பங்கள் மரபுத்தொழில்களின் அழிவுக்கு காரணமாகி விட்டன என்பதைக் குறித்து செய்தித்துணுக்கு தயார் செய்க

8. முதல் தமிழ் ‘வலைப்பூ’ பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

**9 முதல் 13வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதவும். மதிப்பெண் நான்கு வீதம்** **(5 × 4 = 20)**

9. சமயங்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி பாரட்டுரை தயார் செய்க.

10. நவீன தொழில் நுட்பமும் இயந்திரமயமாக்கலும் சிறு தொழில்களை நலிவடையச் செய்கின்றன. என்ற கருத்தின் அடிப்படையில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. கருத்தரங்கத்தில் உரையாற்றுவதற்கான உரை தயார் செய்க.

11. தமிழ்ச் சங்கம் சார்பாக நடைபெறும் “இலக்கிய விழா”வில் தாய்மொழிக்கல்வியே சிறந்தது என்ற தலைப்பில் பட்டிமன்றத்தில் பேச உனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்கான கருத்துக்களை தொகுத்து பட்டிமன்றக் குறிப்பு எழுதுக.

12. கவிஞர் மு. மேத்தாவின் “மனமே கோவில் மனிதனே தேவன்” எனும் கவிதையில் வெளிப்படும் மனிதநேயச் சிந்தனைகளை இன்றைய சமூக நிலையோடு ஒப்பிட்டு வானொலி உரை தயார் செய்க.

13. தற்கால சமூகத்தில் ஊடகங்களின் தாக்கத்தால் விளையும் நன்மை தீமைகளைப் பட்டியலிடுக.

**14 முதல் 19 வரையுள்ள வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடை தருக. 6 மதிப்பெண் வீதம்** **(4 × 6 = 24)**

14. மொழியில் இழப்பும் அழிவும் ஏற்படுவதற்கான சூழ்நிழலைப் பற்றி வகுப்பு மலரில் வெளியிடுவதற்கான சிறு கட்டுரை தயார் செய்க.

15. நீங்கள் வசிக்கும் பகுதியில் குப்பை கூளங்கள் மிகுந்து கிடக்கிறது அதனை அகற்றக் கோரி நகராட்சிக்கு ஒரு புகார் கடிதம் எழுதுக.

குறிப்பு : குப்பை கூளங்களை அகற்றுதல் ஏற்படும் பாதிப்புகள் தடுக்கும் வழிமுறைகள்

16. "உகுந்த தண்டலை நீக்கியே – புனல்
வகுத்த தண்டலை தாக்கியே
உப்பளத் தாரை யோட்டியும் – புனல்
அப்பளத் தாரை யீட்டியும்."

இப்பாடல் வரிகளை நயம் பாராட்டி விளக்குக.

குறிப்பு : எதுகை நயம், மேனை நயம்
சொல் நயம், பொருள் நயம்

17. வலைப்பூச்சிகளின் வருகையால் தமிழ் மொழி இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து பத்திரிகையில் வெளியிட ஒரு தலையங்கம் தயார் செய்க.

குறிப்பு : தலைப்பு – முதல் வலைப்பூ¯ இலக்கிய
அறிவு வெளிப்படுதல் – செய்திகள்
பரவுதல் – கருத்துப்பகிர்வு

18. தமிழ் மொழிச் சொற்கள் இன்றும் மலையாள மொழியில் வழக்கில் உள்ளன. என்பதை உங்கள் பாடப்பகுதியின் துணை கொண்டு நிறுவுக.

குறிப்பு : தாழ்க்கோல் – தாக்கோல்
கா – காவு, புடவகொட

19. பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்காக "உழைப்போம் உயர்வோம்" என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

**20 முதல் 22 வரையுள்ள வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 8 மதிப்பெண் வீதம் (2 × 8 = 16)**

20. சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி உங்கள் பள்ளியல் நடைபெறும் கருத்தரங்கில் கட்டுரை வழங்க "இயற்கையும் சுற்றுச்சூழலும்" என்ற தலைப்பில் கருத்தரங்க கட்டுரை தயாரிக்க.

குறிப்பு : . இயற்கை அன்றைய நிலை

. இன்றைய நிலை

. சுற்றுச்சூழல் மாசடைதலுக்கான காரணங்கள்

. வழிமுறைகள்

. தினத்தின் முக்கியத்துவம்

21. தனியொ ருவருக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம் – பாரதியார்
பகலும் இரவும் மாடாய் உழைத்து
பட்டினி கிடந்து ஓடாய் இளைத்து
பயந்து பயந்து காலங்கழித்து நலிந்த
எளியோர் – பட்டுக்கோட்டை

மேற்குறிப்பிட்ட இரு கவிதைகளில் இடம் பெறும் மனித நேயக்கருத்துக்களை ஒப்பிட்டு ஒப்பீட்டுக் கட்டுரை தயார் செய்க.

குறிப்பு : பாரதியார் பாடல் வரிகளின் கருத்து

பட்டுக்கோட்டையார் பாடல் வரிகளின் கருத்து

சமூக இருள் அகற்றுவதற்கான வழிமுறைகள்.

22. இளைஞர் மன்ற விழாவில் இன்றைய "இளந்தலை முறையினரும் வாட்ஸ்அப்பும்" என்ற தலைப்பில் உரையாற்ற சொற்பொழிவு தயார் செய்க.

குறிப்பு : . வாட்ஸ்அப்

. தவறாக பயன்படுத்தல்

. விளையும் தீமைகள்